RTROP.51/2022 – 26.06.2024

CW1 – கோவிந்தராஜன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நிலம் ஆர்ஜிதம் செய்த இடத்தில் எனக்கு சொந்தமாக சுமார் 3.5 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த சொத்து எனக்கு எப்படி வந்தது என்றால் நான் விலைக்கு வாங்கிய சொத்து. Ex.C1 ஆவணத்தில் புஞ்சை ஏக்கர் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த நிலத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிலம் எந்த வருடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் 2020ல் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. Ex.C2 முதல் Ex.C4 ஆவணங்கள் 2023ம் வருடம் வாங்கி தாக்கல் செய்துள்ளேன். பட்டா, அடங்கல், மற்றும் கந்தாய ரசீதுகளில் இன்றைய தேதி வரை புஞ்சை என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி நிலத்தில் நான் இன்னும் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் இல்லை. கோழிபண்ணை வைத்திருக்கிறேன். எத்தனை சதுரடியில் கோழிபண்ணை வைத்திருக்கிறேன் என்றால் 6000 சதுடியில் உள்ளது. கோழிபண்ணையை நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு முன்பிருந்தே

நடத்தி வருகிறேன். 5500 கோழிகள் அதில் வளர்க்கலாம். இன்றுவரை அதுதான் எனக்கு தொழில். இன்றும் 5500 கோழிகள் வளர்த்துவருகிறேன் என்றால் சரி. Ex.C3 படி வாழை, மல்லி ஆகியவை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன் என்றால் கோழிக்காக பயிரிட்டுள்ளேன். வாழை மரத்தை கோழிக்காக வளர்த்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோழிபண்ணைக்கான 6000 சதுரடி நிலம் போக மீதி நிலத்தை விவசாய நிலமாகதான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 997 சதுர மீட்டர் நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள். அந்த 997 சதுர மீட்டர் நிலத்தில் எந்த கட்டிடமும் இல்லை என்றால் சரி. ஆர்ஜிதம் செய்த சமயத்தில் நிலம் விவசாய நிலமாக இருந்தது என்றும் சதுரடி கணக்கில் மனை நிலமாக விலை நிர்ணயம் செய்ய சொல்லி கோர முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய மனைவி என்னுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரி. அவர் RTROP.50/2022 வழக்கில் கோருநர் என்றால் சரி. நிலம் ஆர்ஜிதம் செய்யப்போகிறார்கள் என்று தெரிந்து கொண்டு நான் என் மனைவிக்கு நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சதுரடி கணக்கில் அதிக விலை போகிறது என்பதற்கு பதிவு செய்யப்பட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் இன்றி அதிக இழப்பீடு கோர முகாந்திரம் இல்லை

என்றால் சரியல்ல. ஏற்கனவே நிலத்தின் சந்தை மதிப்பை கணக்கிட்டுதான் இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் எனவே அதிக இழப்பீடு கோர முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. நிலம் ஆர்ஜிதம் செய்த பின்னிட்டு சாலை விரிவாக்கம் செய்த பிறகு தற்போது எங்கள் மொத்த நிலத்தின் மதிப்பு அதிகமாகி விட்டது என்றால் சரி. இன்று வரை அதே நிலத்தில்தான் குடியிருந்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரி. நிலம் ஆர்ஜிதம் செய்ததால் எனக்கு வருமான இழப்போ, தொழில் இழப்போ, ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வேறு இடத்திற்கு குடி பெயராமல் அதே இடத்தில்தான் குடியிருக்கிறேன் என்றால் சரி. தேவையான இழப்பீடு எனக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டதால், எந்தவித ஆவணமும் இன்றி நான் அதிகப்படியான இழப்பீடு கோர அருகதையில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.